Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 24 (09 - 09 - 1991) திங்கட்கிழமை ஓசை: 203

## தமிழ் ஆசிரியர்கள் இல்லாத தமிழ் வித்தியாலயம்

(கேகாலை)

தொளஸ்பாலகையில் உள்ள தோத்தலேயா தமிழ் வித்தியாலயம் தமிழ் மொழியில் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தமிழ் ஆசிரியர் எவருமே இல்லாமல் இயங்கி வருகிறது. தமிழ் தெரிந்த ஆசிரியர்கள் கூட இங்கு நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முழுக்க முழுக்க இப்பாடசாலையில் தமிழ் மாணவர்களே கல்வி பயில்கின்றபோதிலும், சிங்கள ஆசிரியர்கள் மட்டுமே கடமை புரிகின்றனர். இந்த ஆசிரியர்கள் சிங்கள மொழியிலேயே வகுப்புக்களை நடாத்திவருவது ஒரு புறமிருக்க, தமிழ்மொழியைக் கூட போதிப்பதற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினுள் அரசியல் முரண்பாடு; அதிருப்தியாளருக்கு சிலர் ஆதரவு

### பக்கச் சார்பு வேண்டாம் என ஹமில்டன் எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவு தர முன்வந்திருப்பதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா இராணுவத்தினர் எந்தவித பக்கச் சார்புமின்றி செயற்பட வேண்டும் என இராணுவத்தினரை எச்சரித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நேற்று முன் தினம் வெளியேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த இராணுவ உயர் அதிகாரிகள் ஆதரவு அளிக்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இராணுவ உயர் அதிகாரிகளில் ஒருவர் பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல்வாதி ஒருவரை தனியாக சந்தித்துள்ளாரென்றும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இராணுவம் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் ஜனாதிபதி பிரேமதாசா எதிர்கொள்ளும் பிரச்சினைகுறித்து இராணுவ உயர் அதிகாரிகள் தமக்கிடையே விவாதிக்க வேண்டாமெனவும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பூர்த்தி விழா

நல்லூர் சைவமகாசபையால் நடாத்தப்படும் ''சம்பூர்ண ராமாயணம்'' தொடர் கதையின் பூர்த்தி விழாவும் கலைஞர்களை கௌரவிப்பு விழாவும் இன்று மாலை 5.15 மணிக்கு நடைபெறும்.

## பொலிஸ் எனக் கூறி இராணுவம் பண வசூலிப்பு

(குருநாகல்)

கொக்கரயப் பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் என்று கூறிக் கிராம மக்களை மிரட்டிப் பணத்தை வசூலித்த இரண்டு இராணுவத்தினரை கொக்கரயப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் கசிப்பு வடிக்கும் இடத்துக்குச் சென்று பணத்தை வற்புறுத்திக் கேட்டுப் பெற்றதாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் தொடர்ந்தும் குண்டுவீச்சு; மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையேயான மோதல்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. சிறிலங்கா இராணுவத்தினர் மணலாறு காட்டுப் பகுதிக்குள் ஊடுருவும் நோக்கத்துடன் தமது முகாம்களிலிருந்து வெளியேறி முன்னேற முயற்சித்து வருகின்றனர். மணலாறுப்பகுதியில் இருக்கும் நித்திகைக்குளம் காட்டுப்பகுதிக்குள் புக முயற்சித்த இராணுவத்தினரை தடுத்து விடுதலைப்புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர், அதேவேளை விமானப்படையினரின் விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மற்றும் காட்டுப் பகுதிகள் மீது அகோரக் குண்டு வீச்சுக்களை நடத்தி வருகின்றன. இத்தாக்குதலினால் காடுகளும் தீப்பற்றி எரிவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

## போட்டிக்குரிய இடம்மாற்றம்

மருதங்கேணி வட்டவைமட்டத்தில் நடைபெறும் தியாகி திலீபன் நினைவு தடகளவிழா முன்னர் அறிவித்ததுபோல் செம்பியன்பற்றுமகாவித்தியாலய மைதானத்தில் நடை (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கண்ணிவெடி; 5 ராணுவம் பலி; 4 பேர் படுகாயம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின்கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவவாகனம் சிதறியது ஐந்துஇராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் ...றைய தினம் நானாட்டானுக்கும், தள்ளாடிக்கும் இடையே டராக்ரரில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரே கண்ணிவெடியில் சிக்கினர்.

...வட்டாரங்கள் கண்ணிவெடியில் சிக்கிய வாகனம் முற்றாகச் சேதமுற்றதாகவும், அதில் பிரயாணம்செய்த இராணுவத்தினரில் நால்வர் ஸ்தலத்திலேயேகொல்லப்பட்டதாகவும் அறிவித்தன. மேலும் காயம்

## புதியகாரியாலயம்

(நமது நிருபர்)

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதிபெற விரும்பும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோருக்காகக் கோண்டாவில் மாவட்டச் செயலகத்திற்கு அண்மையில் நாளை முதல் புதிதாக ஒரு காரியாலயம் திறக்கப்படவுள்ளது.

## தேர்தலை சந்திக்கஎந்நேரமும் தயாராக இருங்கள்

### ஐக்கிய தேசிய கட்சியினரிடம் பிரேமா கோரிக்கை

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எந்த நேரத்திலும் ஒரு தேர்தலை ...

பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக்குழு கூட்டத்திலேயே சிறிலங்கா ஜனாதி...

...லை என்றும் அரசாங்கத்தின் நிலைமையை தற்போதுகருத்...

மன்ற உறுப்பினருக்கே இந்த இராணுவ உயர் அதிகாரிகள் ஆதரவு அளிக்க முன்வந்திருப்

அதிகாரிகளில் ஒருவர் பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல்வாதி ஒருவரை தனியாக

பதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் ஜனாதிபதி பிரேமதாசா எதிர்கொள்ளும்

டாமெனவும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப்

(4ஆம் பக்கம் பார்க்க)

டன் தமது முகாம்களிலிருந்து வெளியேறி முன்னேற முயற்சித்து வருகின்றனர் மணலாறுப்பகுதியில் இருக்கும் நித்திகைக்குளம் காட்டுப்பகுதிக்

வீச்சுக்களை நடத்தி வருகின்றன. இத்தாக்குதலினால் காடுகளும் தீப்பற்றி எரிவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

டத்தில் நடைபெறும் திலீபன் நினைவு தடகளவிழா முன்னர் அறிவித்ததுபோல் செம்பியன்பற்றுமகாவித்தியாலய மைதானத்தில் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் கண்ணிவெடி; 5 ராணுவம் பலி; 4 பேர் படுகாயம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின்கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவவாகனம் சிதறியது ஐந்துஇராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 12.40 மணியளவில் நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் நானாட்டானுக்கும், தள்ளாடிக்கும் இடையே ட்ராக்ரரில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரே கண்ணிவெடியில் சிக்கினர்.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இக்கண்ணிவெடி சம்பவம் பற்றித் தகவல் வெளியிட்ட சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கண்ணிவெடியில் சிக்கிய வாகனம் முற்றாகச் சேதமுற்றதாகவும், அதில் பிரயாணம்செய்த இராணுவத்தினரில் நால்வர் ஸ்தலத்திலேயேகொல்லப்பட்டதாகவும் அறிவித்தன. மேலும் காயம் அடைந்த ஒரு இராணுவ வீரர் ஆஸ்பத்திரியில் இறந்ததாகவும் தெரிவித்தன. காயமடைந்த மேலும் நான்கு இராணுவ வீரர்களின் நிலை மோசமாக இருப்பதாகவும் தெரிவித்தன.

## புதியகாரியாலயம்

(நமது நிருபர்)

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதிபெற விரும்பும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோருக்காகக் கோண்டாவில் மாவட்டச் செயலகத்திற்கு அண்மையில் நாளை முதல் புதிதாக ஒரு காரியாலயம் திறக்கப்படவுள்ளது.

இக் காரியாலயத்தில் வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதி பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க தனிப்பிரிவு ஒன்றும் செயற்படவுள்ளது.

# தேர்தலை சந்திக்கஎந்நேரமும் தயாராக இருங்கள்

## ஐக்கிய தேசிய கட்சியினரிடம் பிரேமா கோரிக்கை

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எந்த நேரத்திலும் ஒரு தேர்தலை சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக்குழு கூட்டத்திலேயே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர், இருந்தபோதிலும் தமக்கு இப்போதைக்கு பாராளுமன்றத்தை கலைத்து விடும் நோக்கம்இல்லை என்றும் அரசாங்கத்தின் நிலைமையை தற்போதுகருத்தில் கொண்டேதாம்இவ்வாறு கேட்டுக்கொள்வதாகவும் தாம் எப்பொழுது வேண்டுமானாலும் தேர்தலை அறிவிக்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

## துணைப்படை வீரரின் துணிகர தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது துணைப்படை வீரரொருவர் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளியன்று நெடுங்கேணியிலுள்ள பெரியகுளம் என்னும் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது. சிறிலங்கா இராணுவத்தினர் அத்துணைப்படை வீரரைக் கைது செய்ய முயன்றபோதே இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிய வருகிறது.

இத்தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

# புலிகளுக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## பெண்கள் உட்பட பலர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் ஆதரவு தெரிவித்து சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் மாநாடும் நடாத்த முயன்ற தமிழ்நாட்டு மக்களும் மனித உரிமைகள் சங்கத் தலைவரும் தமிழ்நாடு பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை சென்னை புறநகர் பகுதியான அம்பத்தூரில் இந்த சம்பவம் இடம்பெற்றது நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியபோது இடைமறித்ததமிழ்நாடு பொலிசார் அவர்களில் பலரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஆறு பெண்களும் அடங்குவர் என்றும் ஐம்பத்தாறு பேர் வரையில் மொத்தமாக கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

விசேடமாக தமிழ்நாடு மனித உரிமைகள் சங்கத்தின் தலைவர் பக்தவத்சலம் என்பவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலத்தின் முடிவில் தமிழீழ மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவு தெரிவித்து ஒரு மாநாடு நடத்துவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த மாநாட்டை தடை செய்வதுடன் இதனை

(4ஆம் பக்கம் பார்க்க)

# பகிரங்க வாக்கெடுப்பு உயிருக்கு ஆபத்தாக முடியும்

## -அனுரா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீதான குற்றச்சாட்டு மனுமீது பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்

இந்த அசாதாரணமான சூழ்நிலையில் பகிரங்கவாக்கெடுப்பானது பாராளுமன்ற அங்கத்தினரின் உயிருக்கே ஆபத்தானது என்றார் அவர்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளைப்படி பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற ரணில் விக்கிரமசிங்காவின் கூற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிய அனுரா; அப்படியானால் சபாநாயகர் எப்படி இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார் என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பைக் கோரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு வர்த்தகர் சுட்டுக்கொலை

வவுனியா பூமாங்குளம் பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் இரண்டு வர்த்தகர்களைச் சுட்டுக் கொன்றனர்

பொன்னையா குழந்தைவேலு (வயது 47), ரங்கசாமி ராமலிங்கம் (வயது 40) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டோராவர். மேலும் ஒருவர் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

## வீரவணக்கம்

### முகமத், குட்டி, வசந்தா

மணலாறு மாவட்டத்தில் 7 ஆம் திகதி அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் முகமத் (சிவஞானம் சுபாகரன், வினாயகபுரம், அம்பாறை), குட்டி (லிங்கராஜா ரவிச்சந்திரன், தனங்கிளப்பு, சாவகச்சேரி), வசந்தா (ஜெயவதனி சண்முகநாதன், நாவலர்வீதி, மாதகல்) ஆகியோர் வீர மரணமடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழக மீனவர் மீது இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்க சிறிலங்காவிடம் கோரிக்கை

(சென்னை)

இலங்கை கடற்பகுதிக்குள் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களின் மீது இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்குமாறு இந்தியா இலங்கையைக்கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா "இலங்கைக் கடற்பகுதிக்குள் செல்லும் இந்திய மீனவர்கள் மீது இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்திய மீனவர்கள் நான்கு பேரை இலங்கைக் கடற்படை தாக்கியதைத் தொடர்ந்து இந்த வேண்டுகோளை இந்தியா இலங்கையிடம் கேட்டுள்ளது.

## வவுனியா செல்லும் வியாபாரிகளுக்குப் புதிய அறிவுறுத்தல்கள் சில

(நமது நிருபர்)

வவுனியாவிற்கு வியாபார நோக்கங்களுக்காகப் பயண அனுமதி பெற்றுச் செல்வோருக்கு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

இவ் அறிவுறுத்தல்கள் எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். இதன்படி ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வாரம் இருமுறை மாத்திரமே பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர். வவுனியா, மன்னார் மாவட்ட மக்கள் ஞாயிறு, புதன்கிழமைகளிலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்கள் செவ்வாய் மற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## துஷ்பிரயோகம் பற்றித் தகவல் தரவும்

(நமது நிருபர்)

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதிபெறுவது சம்பந்தமானபிரச்சினைகள், துஷ்பிரயோகங்கள் என்பன பற்றி தகவல் அறிந்தவர்கள்பொறுப்பாளர், போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், தபால்பெட்டி இலக்கம் 1180, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர் தொடர்புகொள்வோர் தமது பெயர் முகவரியையும் சேர்த்து எழுதும் படியும் தகவல்கள் இரகசியமாகவைக்கப்படும் என்றும், கடிதங்களுக்கு முத்திரை ஒட்டப்பட வேண்டியதில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 45-ம்நாள் நினைவஞ்சலி

### வீரவேங்கை புஷ்பன்
(நடராசா - குலேந்திரன்)

வீரஜனனம் 09 04. 1972

வீரமரணம் 27 · 07 . 1991

வீரத்துடன் புறப்பட்டாய் - களத்தினிலே
வீரமறவன் தமிழனென - காட்டிநின்றாய்
ஆனையிறவு தன்னில் அன்பான - உன்
அருமைத் தோழருடனும்,
இயந்திரத் துப்பாக்கியோடும் - மண்ணுலக
இந்திரனாய் நீ போரிட்டாய் - சயவருடன்
எதிரியின் துப்பாக்கி குறிவைக்க - வேளையிலும்
எள்ளளவும் தயங்காமல் களத்தினிலே நின்ற வேங்கை
கழுத்தினிலே நஞ்சையும்
நெஞ்சினிலே உறுதியையும் கொண்ட
வேங்கைகளின் தியாகத்தின்
வரிசையிலே 'கரும்புலி'' நீயென
வரிப்புலி வேடம் கொண்டாய்
புஷ்பன் எனப புகழ் நாமம் நீ கொண்டு
புனிதப் போரில் பங்கு கொண்டாய்
புஷ்பங்கள் வாடுகின்ற போதிலும்
புஷ்பன் எனும் உன் நாமம் வாடப் போவதில்லை.

'அருள் வீதி'
நாவற்குழி தெற்கு.

குடும்பத்தினர்,
தாய், நடராசா, சிதம்பரம்.

(R-1715)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



வீரவேங்கை

## 61-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை ஜெகன்
(சவரியர் மோகனதாஸ்)

ஈழ மண்ணில் ஜனனம் 01.04.1973

ஈழ மண்ணில் வீர மரணம் 11.07.1991

திதி:- 09.09.1991

மாதவச் செல்வனே மோகனதாஸ்
ஆதவம் படைத்திட்ட அற்புதனே
காவியம் புகழ்பாட காத்து நின்ற திருமகனே
மேவிய செந்தமிழை மேதினியில் காத்தவனே
மானமறப் போரொன்று மருமென்று கொண்டவனே
ஆனையிறவு மாநகரில் களமொன்று வருமென்று
காவலராய் படுகளத்தில் கால்கடுக்க நின்றவனே
வேட்டுக்கள் மத்தியிலே விறுகொண்ட மாவீரா
துட்டரின் குண்டொன்றுன்
பட்டுடல் தன்னிலே பட்டதுவோ
காலம் அழிந்திடலாம் ஆனால்...
உனை ஈன்றோர் கானம் அழிந்துவிடா
என்ற எம் உணர்வோடு உன்
கனவை நினைவாக்க காத்திருக்கும் வீரர்களை
வாழ்த்தியே புகழ்பாடி... உன்
ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா
சகோதரர் சகோதரி மற்றும்
உறவினர், நண்பர்கள்.

முலவை
மயிலிட்டி வடக்கு

(R/1717)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின்
மடியில்:
02.06.1972

## தபாற் பொதிகள் இறக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வெள்ளியன்று பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேர்ந்த குமணவிலிருந்து நேற்று இரவு வரை தபால் பொதிகள் தரையிறக்கப்படவில்லை.

வழக்கத்துக்கு மாறாக இம்முறை கப்பலில் தபால் பொதிகள் மற்றப் பொருள்களுக்கு அடியில் வைக்கப்பட்டுள்ளதால் இந்தத் தாமதம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை தான் கடிதங்களை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்று யாழ். தபாற்கந்தோர் வட்டாரங்கள் தெரிவித்தன.

### பெருங்கனல்

மகனே! — இளம்புலியே
அரும்பிடும் வயதில்
பெரும் புலியாக ...
பாய்வதற்கு ...
எப்படியடா
உன் இதயத்தில்
பெருங்கனலை
மூட்டினாய்?

— வாஞ்சிநாதன்

## வரி விளம்பரம்

### கல்வி

GC.E (O-L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இது வரையும் சித்திபடையாதவர்களுக்கும் 25 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40பணித்தியாலத்திற்குள் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை. லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (R-1723)

### 45-ம் நாள் நினைவஞ்சலி



## ஜப்பானும் அங்கீகாரம்

போல்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனத்தை ஜப்பானும் அங்கீகரித்துள்ளது

பால்டிக் குடியரசுகளின் உடனடி உதவிகளை ஜப்பான் வழங்கவுள்ளதாகவும் ஜப்பான் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

## "வள்ளி திருமணம்"

(நல்லூர்)

நல்லூர்கந்தசுவாமிகோயில் பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் ''வள்ளி திருமணம்'' வில்லுப்பாட்டு இன்று மாலை 5மணிக்கு நடைபெறும்.


## வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்! துரித தபால் சேவைக்கு

DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K. K. S. Road,
JAFFNA.

(B-3079)


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 09 - 09

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1985ஆம் ஆண்டு சத்துருக் கொண்டானில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
பேனாட் (குருசுமுத்து துரைசிங்கம் - நாகர்கோயில்
ஜோன் (ஜோன் கெனடி-இருதயபுரம், மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்

முலவை
மயிலிட்டி வடக்கு

அப்பா, அம்மா
சகோதரர் சகோதரி மற்றும்
உறவினர், நண்பர்கள்.

(R/1717)

லத்தறகுள் விஷேட சத்துக
குக் கற்பிக்கப்படும். ஆறுமுக
நாதன், 10, கச்சேரி கிழக்கு
ஒழுங்கை. லோகேந்திரா
வீதி, சுண்டிக்குளி. (R-1723)



## வீரவேங்கை
## லெப்ரினன்ட் சிவம் (பவான்)
### (திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன்)

வீரஜனனம் 03 . 06 . 1972 — வீரமரணம் 27 . 08 . 1991

உளத்திலே வீரம் கொண்ட
உறுதிசேர் வேங்கையாக
களத்திலே நின்று மோதி
காத்தனன் தமிழர் மானம்

ஆனையிறவன்று கண்ட
காவிய வீரன் ஆனாய்
இமையாணன் ஊரின் மானம்
காத்திட மாய்ந்த புலியே

செயற்றிறம் உடை பவானே
சமருக்களம் வென்ற வீரா
வியப்புறு போர் நிகழ்த்தி
வீரர்தம் புரியே போந்தாய்

சிந்திய குருதிவெள்ளம்
சிந்தனைக் கருவாய் மாறும்
உந்தனின் வழியே வீரர்
உதித்திடக் களம் சமைக்கும்

வென்றிடும் ஈழம் தன்னில்
வெற்றியின் படிகள் நீங்கள்
நின்றிடும் நும் நினைவு
என்றும் நீ நெஞ்சில் வாழ்வாய்

– உறவினர்கள்

B-3073)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: **02-06-1972**

ஆனையிறவு மண்ணில்: **27-07-1991**

## கப்டன் கீர்த்தி
### (வீரப்பாபிள்ளை கனகேஸ்வரன் - பாபு)

செந்தமிழ் ஈழத்தை மீட்டிடும் பணியில்
செந்தீயிடை போன மன்னவர் வழியில்
வீரென எழுந்து நீ சென்றாயோ — பாபு
வீணரை வீழ்த்தியே மண்ணில் சாய்ந்தாயோ!

எத்தனை எத்தனை நினைவலைகள் — நெஞ்சில்
எண்ணிடும் போது கண்ணில் நீர் அலைகள்
மறைந்திடா கண்ணில் புன்சிரிப்புமுகம் — பாபு
மாறாதப்பா நெஞ்சில் உந்தன் பிரிவுத்துன்பம்!

27 - 07 - 1991 அன்று இவருடன் வீரமரணமடைந்த
சக போராளிகள் அனைவருக்கும் இந்நாளில்
கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.

உந்தன் அன்பால் உனைப்பிரிந்து
துயருறும் நெஞ்சங்களுடன்
ஆச்சியம்மா குடும்பத்தினர்
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

இல. 4. அ வீ தி.
இடைக்குறிச்சி,
வரணி.

(R/1716)

## 45-ம் நாள்
## நினைவஞ்சலி



### வீரவேங்கை
### அன்பினி
(செல்வி சிவனடி விஜிதா)

வீரஜனனம் 10.03.1969 — வீரமரணம் 27.07.1991

மரணத்தை வென்று
மாவீரர் ஆனவளே
வீரத்தின் விளைநிலமே
விஜிதாவே - நீ
ஆனையிறவில் ஆடிய
போரில்
அந்நியர் ஆயிரம் மடிந்தே
போயினர்
செந்தமிழ் ஈழம் மலர
சிந்திய உனது குருதியின்
- முன்
செயற்படுவோம் உன்
வழியில்.

27-7-91 அன்று அன்பினியுடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

க. சிவனடி (சிவம்)
(மெக்கானிக்)
குடும்பத்தினர்

சங்கரந்தோட்டம்
கரணவாய் தெற்கு
கரவெட்டி

(B/3080)

## 1991 - 09 - 09

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டியில்
சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட
தமிழ்ப்பொதுமகன்

1985ஆம் ஆண்டு சத்துருக் கொண்டானில் சிறிலங்கா
அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்
வீரமரணமெய்திய
பேனாட் (குருசுமுத்து துரைசிங்கம் - நாகர்கோயில்
ஜோன் (ஜோன் கெனடி-இருதயபுரம், மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் விசேட
அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்
போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
பிரதீஷ் (சின்னத்துரை ரகு - கோஸ்வே றோட்,
ஆரையம்பதி - 3)
பிரியன் (தம்பிப்பிள்ளை நவரட்ணராஜா -
ஆரையம்பதி)

1987ஆம் ஆண்டு தாண்டியடியில் வீரமரணமெய்திய
கிருபா (பொ. சிறி - அக்கரைப்பற்று)

1989ஆம் ஆண்டு வவுனியா ஆனந்தப் புளியங்குளம்
பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து
தாக்கியதில் வீரமரணமெய்திய
மணியம் (சின்னையாதேவதாசன்-புதுக்குளம், ஓமந்தை)
சுதன் (வேலாயுதம் சுரேந்திரன் - சேமமடு, ஓமந்தை)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால்
சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப்
படையினருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும்
போது தவறுதலாக பொறி வெடி வெடித்ததினால்
சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
ஜெயபால் (முத்துலிங்கம் சுகு-ஐயங்கேணி ஏறாவூர்)

மட்டக்களப்பு, புல்லுமலைப் பகுதியில் சிறிலங்காப்
படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக்
கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

மட்டக்களப்பு சத்துருக் கொண்டான், பிள்ளையாரடி,
கொக்குவில் பகுதிகளில் சிறிலங்காப்படையினர்
மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டும்
வெட்டியும் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள்
உட்பட 170 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(B/3078)

✤ சிந்தனைக்கு ✤

எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காவிடில் எதிர் காலம் என்று ஒன்று இருக்காது.

— ஜான் கேல்ஸ்வொர்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 09-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 021-2839 நிர்வாகபீடம் 2396
த. பெ. எண் 01

## இந்தியா மாற்றத்திற்கு தயாராவது நல்லது

சோவியத் யூனியனின் கீழ் குடியரசுகளாக இருந்த லித்துவேனியா, எஸ்தோனியா, லட்வியா ஆகிய போல்டிக் குடியரசுகளை தனித்தனி சுதந்திர அரசுகளாக பல நாடுகள் அங்கீகரித்துள்ளன. மேற்குலகம் தொடக்கி வைத்த இந்த அங்கீகாரத்தை தற்பொழுது சோவியத் யூனியன் உட்பட சீனா, இந்தியா ஆகிய நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இதில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் அங்கீகாரம் அவர்களின் நீண்டகால அரசியல் லாப நோக்கில் அமைந்ததாகும். இது அவர்களுக்குக் கிடைத்த வெற்றியும் ஆகும். ஆனால் சோவியத் யூனியனும், சீனாவும், இந்தியாவும் சூழ்நிலைகளின் கைதிகளாகியே இந்த அங்கீகாரத்தைச் செய்துள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது. அதிலும், சோவியத் யூனியனும், சீனாவும் இராஜதந்திர ரீதியில் வெற்றிகரமாக இவ் விவகாரத்தில் நடந்து கொண்ட வேளையில் இந்தியா இராஜதந்திரத் தோல்வியுடன் அதனை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியது.

அண்மைக் காலத்தில் இந்திய இராஜதந்திரத்திற்கு கிடைத்த பெரும் தோல்விகளில் இதுவும் ஒன்றாகும். இலங்கை இனப்பிரச்சினையில் ஏற்பட்ட தோல்வி, வளைகுடாப் போரின்போது ஏற்பட்ட தோல்வி என்பனவற்றிற்கு அடுத்து ஏற்பட்ட தோல்வி இதுவாகும்.

சோவியத் யூனியனில் பெரும் அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதையும் அதன் மூலம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை ஏனெனில் அங்கு தேசிய இனங்களுக்கு கிடைக்கும் வெற்றி ராம் இந்தியாவிலும் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் என இந்தியா அஞ்சியது. அதாவது அமெரிக்க சுதந்திரப் போர் பிரெஞ்சுப் புரட்சியிலும், பிரெஞ்சுப் புரட்சி காலனித்துவ நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் தாக்கத்தை விளைவித்தது போன்று சோவியத் யூனியனில் ஏற்படும் தேசிய இனங்களின் போராட்ட வெற்றி இந்தியாவையும், தென்னாசியாவையும் பாதிக்கும் என இந்தியா கருதுகின்றது.

### சொந்த நிலங்களில் மீளக் குடியேறுதல்

# கொலைக்களம் செல்வதற்கு ஒப்பானதென தமிழர் அச்சம்

மட்டக்களப்பு நிலைமைகள் குறித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் 07.09.1991 அன்று "ஈழநாதம்" நிருபருக்கு வழங்கிய விசேட பேட்டியின் ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது.

★ கேள்வி: மீளக்குடியமர்த்தல். - புனர்வாழ்வு பற்றி பெரியளவில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவே இவை பற்றிய நிலைமை எப்படியுள்ளது?

பதில்: அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை முப்பத்தி ஆறு கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் வெளியேறியுள்ளனர். இவர்கள் அனைவரும் தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, பாண்டிருப்பு, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாமில் தங்கியுள்ளனர். இவர்களில் பொத்துவில் மக்கள் கோமாரியில் அகதிகளாக தங்கியிருந்தனர். கடந்த வருடம் ஏழாம் மாதம் இருபத்தி மூன்றாம் திகதி பொத்துவில் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக அமைச்சர்கள் அங்கு சென்றிருந்தபோது அச்சமயம் அங்கு இருந்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரி எனது பகுதிக்குள் அகதிகள் என்று எவரும் இருக்கக்கூடாது எல்லோரும் திரும்பவும் தமது இடங்களில் குடியேற வேண்டும் இல்லையேல் புல்டோசர்மூலம் இந்த இடத்தை விட்டு அகற்றுவோம் என்று மிரட்டினர். அப்போது அவருடன் கூடச் சென்ற உதவி அரசாங்க அதிபர் சச்சிதானந்தம் "எல்லோரும் மீளக்குடியமருங்கள், உங்களுக்கு உலர் உணவு வழங்கப்படும்; வீடுகள் திருத்த பணமும் வழங்கப்படும் என்று உறுதி கூறியதை அடுத்து மக்கள் திரும்பவும் தமது இருப்பிடங்களுக்குச் சென்றாலே இந்த மக்கள் பயப்படுகின்றார்கள். காரைதீவில் இருப்பவர்களையும் மீளக் குடியமருமாறு வேண்டுகோள் விடுக்கும் போது அவர்கள் பயப்படுகின்றார்கள். செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் உறுதிமொழியையும் நம்ப மக்கள் தயாராக இல்லை.

அகதிமுகாம் என்று இருக்கும் போது அங்கு வந்து முஸ்லிம் ஊர்காவல் படையோ, இராணுவமோ தனிப்பட்ட கொலைகளை செய்ய முடியாது. கைது செய்துகொண்டு சென்றாலும் தெரியவரும். அகதி முகாமுக்குள் கைது செய்தார்கள் என்ற செய்தி பரவும் மீள்குடியமர்வு என்ற பெயரில் பழைய இடங்களுக்கு செல்கையில் முஸ்லிம் ஊர்காவல் படை ஒவ்வொரு குடும்பமாகப் பிடித்து அழிக்கலாம் சிங்கள இராணுவமும் பிடிக்கலாம். அவ்வாறு பிடித்துச் செல்லப்பட்டால் தெரியவராது. அந்தப் பயமும் மக்களுக்கு உண்டு.

இதேபோல வீரமுனை சென்றல்காம்ப் பகுதியில் இருந்த மக்கள் மண்டூரில் போய் அகதிகளாகத் தங்கியிருந்தனர். மண்டூரில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டவுடன் அங்கிருந்த அகதிகள் மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு அனுப்பப்பட்டோரில் பதின்மூன்றுபேர் ஆகஸ்ட் பதினாறாம் திகதி முஸ்லிம் ஊர்காவல் படையினாலும் சிங்களவராலும் படுகொலை செய்யப்பட்டுள்

ணம் காட்டி அப்பகுதிகளுக்குள் சென்று உதவி புரிவதை நிறுத்தியுள்ளார்கள். பெயருக்கு மட்டக்களப்பு நகரம் போன்றவற்றில் சில உதவிகளை செய்துவருகின்றனர்.

★ கேள்வி: சிங்களக் குடியேற்றங்கள் பற்றி ...........

பதில்:- பொலன்னறுவை, மட்டக்களப்பு மாவட்ட எல்லையுடன் 40 000 சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டுள்ளனர். இவர்களுக்காக வெலிக்காக்கந்த என்ற தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. இவர்களைக்குடியமர்த்த முன் அம்பாந்தோட்டை எம்-பி நீங்கள் அங்கு போய் புலிக்கெதிராக-யானைக்கெதிராக-நுளம்புக்கெதிராக அங்கு போரிட்டுத்தான் வாழ வேண்டியிருக்கும் என்று அறிவுறுத்தியே அனுப்பியுள்ளார். இவர்கள் அங்கு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டே இங்கு குடியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்களுக்கு பாதுகாப்பாக இராணுவமுகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்குடாவில் 56 சிங்கள மீனவர் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்காக தமிழ் மீனவர்களின் வலை- தோணிகள் பறிமுதல் செய்து வழங்கப்பட்டுள்ளன. அருகிலிருந்த கல்மடு என்ற கிராமத்தை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த மக்களை அடித்து விரட்டி விட்டு அந்த வீடுகளில் இருந்த பொருள்களை எல்லாம் சிங்களமீனவர்களுக்கு வழங்கியுள்ளனர். இதனை போன்றே புன்னைக்குடாவிலும் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் இங்கு ஒரு கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கடற்படையினர் தமிழ் மீனவர்களுக்கு தொல்லை கொடுத்து வருகின்

வத்தினர் இவற்றை வாகனங்களில் எடுத்துச் செல்வதற்கு முஸ்லிம்கள் சகலவழிகளிலும் உதவியுள்ளனர்.

பொத்துவிலில் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்



ளனர். இவர்களுக்கு அரசினால் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதே வேளை முஸ்லிம்கள் பழைய முறைப்படி மரக்கலங்களிலேயே மீன்பிடித்து வருகின்றனர் அதனால் இவர்கள் பாதிப்படைந்துள்ளனர் எனினும் இவற்றை வெளியில் எடுத்துச் சொல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

ரொட்டேரியில் தமிழரின் இடங்களில் சிங்களவர்கள் குடியேறியுள்ளார்கள் பாணமையில் சிங்களவரும் தமிழர்களும் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்த தமிழ் ஆசிரியரை அடித்து விரட்டி விட்டு அதற்குப் பதிலாக சிங்கள ஆசிரியரை நியமித்துள்ளனர். இதனால் முன்னர் தமிழ் படித்த பிள்ளைகளெல்லாம் தற்போது சிங்களம் படித்து வருகின்றனர்.

பக்கியெல்ல, பாலையடி வெட்டை, சின்னவத்தை 35ஆம் கிராமம் போன்ற

கிடைத்த பெரும் தோல்விகளில் இதுவும் ஒன்றாகும். இலங்கை இனப்பிரச்சினையில் ஏற்பட்ட தோல்வி, வளைகுடாப் போரின்போது ஏற்பட்ட தோல்வி என்பனவற்றிற்கு அடுத்து ஏற்பட்ட தோல்வி இதுவாகும்.

சோவியத் யூனியனில் பெரும் அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதையும் அதன் மூலம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை ஏனெனில் அங்கு தேசிய இனங்களுக்கு கிடைக்கும் வெற்றி நாம் இந்தியாவிலும் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் என இந்தியா அஞ்சியது. அதாவது அமெரிக்க சுதந்திரப் போர் பிரெஞ்சுப் புரட்சியிலும், பிரெஞ்சுப் புரட்சி காலனித்துவ நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் தாக்கத்தை விளைவித்தது போன்று சோவியத் யூனியனில் ஏற்படும் தேசிய இனங்களின் போராட்ட வெற்றி இந்தியாவையும், தென்னாசியாவையும் பாதிக்கும் என இந்தியா கருதுகின்றது.

இதன் காரணமாக சோவியத் யூனியனில் கொர்பசேவிற்கு எதிரான ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றபோது இந்தியா அதனை மறைமுகமாக வரவேற்றது என்றே சொல்லலாம். இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் "நடந்தது எல்லாத் தலைவர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். புரட்சிகரத் திட்டங்களை அவசரமாகத் திட்டுபவர்கள் எல்லோருமே கொர்பசேவ் மாதிரித்தான் போகவேண்டியிருக்கும்" எனத் தெரிவித்திருந்தார். அதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சரகமும் ஆட்சிக் கவிழ்ப்பைக் கண்டிக்கவில்லை சோவியத் யூனியனுடனான நட்பைப் பற்றியே பேசியது.

ஆனால் அரசியலில் ஏற்படும் மாற்றங்களும், புரட்சிகளும் சூழ்நிலைகளின் காரணத்தினால் தவிர்க்க முடியாத நிலையில், தமக்குரிய தலைமைத்துவம் ஏற்படுகின்ற போதும் நிகழ்பவை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியிலும் சரி, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யாவில் நிகழ்ந்த கம்யூனிசப் புரட்சி ஆகிலும் சரி இதையே எடுத்துக் காட்டுகின்றன. இதனை இன்றும் இந்திய அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாமல் தனிப்பட்ட நபர்களினால் மட்டுமே மாற்றங்கள், புரட்சிகள் உருவாகின்றன என எண்ணுவது கவலை தரும் விடயமாகும்.

இந்தியா மாற்றத்தை விரும்பவில்லை என்பதற்காக மாறுதல்கள் நிகழாமல் இருக்கப் போவதில்லை. இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். இதனை சோவியத் விவகாரத்தில் இருந்து இந்தியா படிப்பினையாகக் கொள்ள வேண்டும். அதற்கேற்றாற் போல் தென்னாசியாவிலும் தேசிய இனங்களின் பிரச்சினையில் நடந்து கொள்ள வேண்டும்.

இந்திய மத்திய அரசும் அதில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல்வாதிகளும் இதனைப் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். சுமார் 50 வருடங்களுக்கு மேலாக உலகின் முதன்மையான வல்லரசுகளில் ஒன்றாக இருந்த சோவியத் யூனியனாலேயே மாற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய் விட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு இந்தியா புதிய கொள்கைகளை உருவாக்க வேண்டும். இதுவே இந்தியாவின் எதிர் காலத்துக்கு நல்லது.

---

பேட்டியின் ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது.

குடியேற வேண்டும் இல்லையேல் புல்டோசர்மூலம் இந்த இடத்தை விட்டு அகற்றுவோம் என்று மிரட்டினர். அப்போது அவருடன் கூடச் சென்ற உதவி அரசாங்க அதிபர் சச்சிதானந்தம் "எல்லோரும் மீளக்குடியமருங்கள், உங்களுக்கு உலர் உணவு வழங்கப்படும்; வீடுகள் திருத்த பணமும் வழங்கப்படும் என்று உறுதி கூறியதை அடுத்து மக்கள் திரும்பவும் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். பொத்துவிலைப் பொறுத்தவரை இவ்வளவு காலமும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் எந்தப் பிரச்சினையும் எழுந்ததில்லை. இம்முறை மட்டும் தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆகவே நாம் திரும்பி அங்கே செல்லலாம் என்ற நம்பிக்கையுடன் உதவி அரசாங்க அதிபரின் உறுதியை நம்பி மக்கள் அங்கே சென்றனர். அடுத்த நாளே இவர்கள் அனைவரும் சுற்றிவளைக்கப்பட்டு ஆண்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஆண்களில் முப்பத்திரெண்டு பேர் உடனேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினருமே இவர்களை சுட்டுக்கொன்றனர். இதைப் பார்த்துக் கதறிய பெண்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து கோமாரிக்கு இந்தப் பெண்கள் ஓடினர். அங்கிருந்து கோமாரி இராணுவத்தினர் இவர்களை மீண்டும் பொத்துவிலுக்கு கூட்டிக் கொண்டு வந்து மிகுதியாக இருந்த ஒன்பது பேரை விடுதலை செய்தனர். அன்று மொத்தமாக கைது செய்யப்பட்டவர்கள் நூற்றி இருபத்தாறுபேர் ஏனையவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை.

மீளக்குடியமர்த்தல் என்ற பெயரிலே தமக்குக் கிடைத்த அனுபவத்தின் பின்னர் திரும்ப மீளக்குடியமர்த்தல் என்ற சென்றல்காம்ப் பகுதியில் இருந்த மக்கள் மண்டூரில் போய் அகதிகளாகத் தங்கியிருந்தனர். மண்டூரில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டவுடன் அங்கிருந்த அகதிகள் மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு அனுப்பப்பட்டோரில் பதின்மூன்றுபேர் ஆகஸ்ட் பதினாறாம் திகதி முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் சிங்களவராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நாலு பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. இந்த நிலைமைகள் மீளக்குடியமர்வு பற்றிய அச்சத்தையே மக்களுக்கு ஏற்படுத்துகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மே மாதம் 30ஆம் திகதி அமைச்சர்களின் வருகை தந்த போது இராணுவத்தினர் தமது பகுதிக்குள் அகதிகள் இருக்கக்கூடாது. அகதிமுகாம்கள் அனைத்தையும் மூட வேண்டும் என அறிவித்தனர். இராணுவத்தினரின் இந்த உத்தரவுக்கமைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஏறாவூரைச்சுற்றியுள்ள புதுக்குடியிருப்பு, ஆறுமுகத்தான் குடியிருப்பு மயிலம்பாவெளி போன்ற பகுதிகளில் மக்களைக் கொண்டு போய் இறக்கியுள்ளார். இவர்கள் தமது வீடுகள் எல்லாம் எரிக்கப்பட்ட நிலையில் எதுவுமே அற்ற நிலையில்தான் இருந்தவர்கள். இவர்களை ஆடு மாடுகள் ஏற்றுவது போல் லொறியில் ஏற்றி கொண்டு போய் இறங்கியுள்ளார் இவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவோ, பணத்தைக் கொடுக்கவோ அக்கறையெடுக்கவில்லை. இவர்களில் பலர் மட்டக்களப்புக்கு திரும்பிவிட்டனர்.

✶ கேள்வி: பொது ஸ்தாபனங்களின் பங்களிப்பு எந்தளவில் உள்ளது?

பதில்: பெரியளவில் இல்லை. தடைசெய்யப்பட்ட பிரதேசங்கள் என்ற இராணுவத்தின் அறிவிப்பை கார

செய்து வழங்கப்பட்டுள்ளன. அருகிலிருந்த கல்மடு என்ற கிராமத்தை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த மக்களை அடித்து விரட்டி விட்டு அந்த வீடுகளில் இருந்த பொருள்களை எல்லாம் சிங்களமீனவர்களுக்கு வழங்கியுள்ளனர். இதனைப் போன்றே புன்னைக்குடாவிலும் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் இங்கு ஒரு கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கடற்படையினர் தமிழ் மீனவர்களுக்கு தொல்லை கொடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வீடுகளில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் குடியேறியிருக்கின்றனர் பொத்துவிலில் தற்போது தமிழ்மக்களின் சில வீடுகளும் உடைக்கப்பட்டுள்ளன. அக்காணிகளில்இருந்த மரங்களும் தறித்து எடுக்கப்பட்டுள்ளன. இராணு

நிலையிலுள்ளனர்.

ரொட்டேவில் தமிழரின் இடங்களில் சிங்களவர்கள் குடியேறியுள்ளார்கள் பாணமையில் சிங்களவரும் தமிழர்களும் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்த தமிழ் ஆசிரியரை அடித்து விரட்டி விட்டு அதற்குப் பதிலாக சிங்கள ஆசிரியரை நியமித்துள்ளனர். இதனால் முன்னர் தமிழ் படித்த பிள்ளைகளெல்லாம் தற்போது சிங்களம் படித்து வருகின்றனர்.

பக்கியெல்ல, பாலையடிவெட்டை, சின்னவத்தை 35ஆம் கிராமம் போன்ற எல்லையோரக் கிராமங்களுக்கு முற்றாக தமிழர்கள் செல்லமுடியாத நிலையுள்ளது. வீடுகளை உடைத்து அங்கிருந்த பொருள்களை இராணுவத்தினர் ஏற்றிச் சென்றுள்ளனர். மரங்களைத் தறித்து காவல் அரண்களுக்கு பயன்படுத்துகின்றனர்.

(தொடரும்)

## தமிழக இ. காங்கிரஸினுள் கருத்து வேறுபாடு

(சென்னை

தமிழ் நாடு சட்டப்பேரவை இந்திரா காங்கிரஸ் கட்சி அலுவலர்களின் பட்டியல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது தொடர்பாக கட்சிப் பொதுச் செயலர்களில் ஒருவரான வி. தண்டாயுதபாணி எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் கட்சித் தமிழ் நாட்டுக் கிளையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலை அங்கீகரிக்க வேண்டாம் என்று வி. தண்டாயுதபாணி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவிடம் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

## இளைப்பாறிய தபால் அதிபருக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு

சுன்னாகம் முன்னாள் அஞ்சல் அதிபர் இ. திருநாவுக்கரசு மற்றும் அவருடன் இளைப்பாறிய பன்னிரு ஊழியர்களுக்கும் சுன்னாகம் மக்களால் பாராட்டு விழா ஒன்று நடாத்தப்பட்டது

மயிலணி சைவமகாவித்தியாலயத்தில் சனிக்கிழமை நடந்த பாராட்டுவிழாவில் பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்ச்சியில் இந்திய சிறிலங்கா இராணுவ அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த காலகட்டத்தில் மக்களின் தேவையை உணர்ந்து துணிந்து செயற்பட்டதாக இவர்கள் பாராட்டப்பட்டார்கள்.

இவர் ஆற்றிய சேவைக்காக தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

''பூமியின் குடிகளே எல்லோரும்
கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்'' (100சங்-:1)



வீரஜனனம்
18
|
11
|
1971

வீரமரணம்
27
|
07
|
1991

## வீரவேங்கை ரகீம்

### (ஐசாக் டொனால்ட் வீரவாகு)

தமிழினம் போற்றும் தங்கத் தமிழா
தலை கொடுத்து தமிழ் காத்த - குமணன் போல
தனை கொடுத்து தமிழ் காக்க - சென்ற வீரன்
வீரத்தின் வேங்கையெனும் வீரவாகு
விரும்பியே வேங்கைகளுள் - ஒன்றேயானான்
ரகீம் என்ற வீரப் பெயர் பெற்று நின்றான்
இரத்தத்தில் தமிழ் உணர்ச்சி பொங்க நின்றான்
எம் மண்ணைக் காக்க வென்று எழுந்த வீரன்
எதிரிகளின் பாசறையை நோக்கி ஓடி
கூடி நின்ற பகைவர் கூட்டம் ஓட ஓடக்
குருதியின் மேல் ஏறி நின்று போர் கண்டானே
அடுத்து வந்த ஆனையிறவுப் பெரும் போர் தன்னில்
அடங்காத சீற்றமோடு படையைத் தாக்கி
வேலெறிந்து வீழ்ந்து விட்ட வேந்தன் போல
விண்ணுலகை அடைந்தானே வீரவேங்கை
எண்ணுகின்ற தமிழரின் நோவு கண்டு
எதிர்த்து வரும் சிங்களத்தை ஒழிக்க வென்று
மாவீரவேங்கை யெனச் சாடி அங்கே
மந்த புத்தி கொண்டுழலும் சிங்களத்தை
மூச்சுள்ள வரை தாக்கி முடிவு காண்பேன்
பேச்சினால் அல்ல செய்கை வீரத்தாலே
எங்கள் தமிழ் எங்களினம் தமிழீழத்தை
மீட்டெடுப்போம் என்று மாவீரன் சொன்னான்
பந்தமோடு பாசமெல்லாம் விட்டுச் சென்று
பணிவான பூச்சுடராய் படுத்து விட்டான்
பணிவான தியாகமொன்றை ஆக்கி விட்டான்
என்னே இவன் பெருமை தமிழீழத்தில்
இதனையே மற்றவரும் சாதிப்பாரே
துக்கமெல்லாம் பக்கத்தில் நிற்க வைத்து
துரிதமாய் தமிழீழம் காண வைப்போம்!

அளவெட்டி மேற்கு.
(B/3075)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

## பாதுகாப்புச் சபையின் உறுப்பினரை அதிகரிக்கவும்

### -இந்தியா கோரிக்கை

(அக்ரா)

ஐ. நா. பாதுகாப்புச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுள்ளது.

இந்தியாவின் இந்த வேண்டுகோளை யூகோஸ்லாவியா, கியூபா மற்றும் நைஜீரிய அரசுகளும் வரவேற்றுள்ளதுடன் கானாவில் நடைபெறும் அணிசேரா வெளியுறவு அமைச்சின் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்படும் பிரகடனத்தில்இது குறிப்பிடப்படவுள்ளது.

ஐ. நா. சபையில் சேரும்நாடுகளின் எண்ணிக்கை பெருகி வருவதால் பாதுகாப்புச் சபை ஜனநாயகப் பண்புடையதாக இருக்க வேண்டும் என்று இந்தியா கேட்டிருந்தது.

## கே.ஜி.பியை கலைக்குமாறு மொஸ்கோவில்ஆர்ப்பாட்டம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் தலைநகரான மொஸ்கோவில் ஆயிரக்கணக்கான மக்கள் கே. ஜி. பிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கே. ஜி. பியைக் கலைக்கவேண்டும் என்றும், இந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

கே. ஜி. பியின் ஆவண காப்பகத்தை பொதுமக்கள் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கேட்டுக்கொண்டனர்.

## உதவி புரியாவிட்டால் மாநாடு பாதிப்படையலாம்

### -அமெரிக்காவிற்கு இஸ்ரேல் எச்சரிக்கை

(டெல்அவிவ்)

உதவி கேட்டுத் தாம் விடுத்துள்ள கோரிக்கையை அமெரிக்கா மறுத்துள்ளதால் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் தாம் கலந்து கொள்ளுவது பாதிக்கப்படலாம் என்று இஸ்ரேல் கூறியுள்ளது. ஆயிரம்கோடி டாலர்கள் கடன் கேட்கும் இஸ்ரேலின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படுவதை நூற்றிருபது நாட்கள் பின்போடுமாறு அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்க காங்கிரசைக் கேட்டுக் கொண்டிருப்பதைத் தொடர்ந்தே இஸ்ரேல் இவ்வாறு கூறியுள்ளது.

### மத்தியகல்லூரி மைதானத்தில்

## யாழ். மாவட்டத்துக்குரிய இறுதி நிகழ்ச்சிகள்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழாவில் யாழ் மாவட்ட ரீதியான இறுதி நிகழ்ச்சிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 22.09.91, 23.09.91 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது வட்டவை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களே மாவட்ட ரீதியான போட்டியில்பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுக் கொள்வார்கள்.

போட்டிக்குரிய


பெறாது; அம்பன் அமெரிக்கன்மிஷன் பாடசாலைமைதானத்தில் 12-09-91, 13-09-91 ஆகிய தினங்களில் நடைபெறும் என விடுதலைப்புலி

புலிகளுக்கு

## ரஞ்சித்குமாருக்கு மக்கள் அஞ்சலி

மணலாறு பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதவில் வீரமரணமடைந்த வீரவேங்கை ரஞ்சித்குமார் (பாலகுமார், புங்குடுதீவு-3) அவர்களுடைய புகழுடம்பு ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது பெருந்திரளான மக்கள் வீரவேங்கைக்கு தமது அஞ்சலிகளைச் செலுத்திய பின்னர் நடந்த அஞ்சலிக்கூட்டத்தைத் தொடர்ந்து புகழுடம்பு சாட்டி மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (22)

## 45ஆம் நாள் வீர அஞ்சலி



வீரஜனனம்
13
|
3
|
1970

வீரமரணம்
27
|
7
|
1991

27 - 7 - 1991 இல் ஆனையிறவில் இலங்கை இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை 'சௌகான்'

### (ஜோய் அன்ரனி சிவானந்தன்)

எப் பிறப்பில் காண்போம் இனி?
உன் ஆருயிர் தாயையும் தந்தையையும்
உடன் பிறப்பையும் மற்றும்
உறவினரையும் தவிக்கவிட்டு எங்கு
சென்றாய் எம் செல்வமே!
மண் மீட்புக்காய் ஆனையிறவில்
தொடர்ந்தும் வீரமுடன் போராடி
போர்முனையில் வெற்றியுடன் திரும்புவாய்
என நாம் எண்ணியிருந்தோம். ஆனால்
மாவீரனாய் மண்ணிலே மறைந்து விட்டாயோ?
என்னவென்று உன் முடிவைக் கூற
ஏதும் அறியாது ஏங்குகின்றோம்
எங்கள் குடும்ப குலக் கொழுந்தே ஜோய்
எம்மை வானில் இருந்து வாழ்த்துவாய்
உம்மை மறப்போமா! மறக்குமா நெஞ்சம்
எமது உயிர் மூச்சு உள்ளவரை
மறக்கவே மாட்டோமடா ஜோய்!

உன் பிரிவால் தாங்கொணாத் துயருறும்
பாசமிகு அம்மா, அப்பா,
சகோதரர்கள், உறவினர்கள்

மாவீரவேங்கை யெனச் சாடி அங்கே
மந்த புத்தி கொண்டுழலும் சிங்களத்தை
மூச்சுள்ள வரை தாக்கி முடிவு காண்பேன்
பேச்சினால் அல்ல செய்கை வீரத்தாலே
எங்கள் தமிழ் எங்களினம் தமிழீழத்தை
மீட்டெடுப்போம் என்று மாவீரன் சொன்னான்
பந்தமோடு பாசமெல்லாம் விட்டுச் சென்று
பணிவான பூச்சுடராய் படுத்து விட்டான்
பணிவான தியாகமொன்றை ஆக்கி விட்டான்
என்னே இவன் பெருமை தமிழீழத்தில்
இதனையே மற்றவரும் சாதிப்பாரே
துக்கமெல்லாம் பக்கத்தில் நிற்க வைத்து
துரிதமாய் தமிழீழம் காண வைப்போம்!

அளவெட்டி மேற்கு. குடும்பத்தினர்,
(B/3075) நண்பர்கள்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

### வீரவேங்கை சகீம்
### [நாகலிங்கம் ஜெகதாஸ்]
### உரும்பராய் தெற்கு

வீரஉதயம் 30.12.1973 | வீரமரணம் 27.07 1991

அடுகள மதனில் அமரனேயானான்

உலகம் புகழும் உயரீழந்தனில்
அலகில் சிறப்புடை அணியாழ் நகரிலே
இருதய ஸ்தானம் என்றே இலங்கிடும்
உரும்பராய்ப்பதியில் உறுதென் திசையினில்
நாகலிங்கமும் நனிசெல் லம்மையும்
இல்வாழ் வதனில் இன்பமாய்ப் பெற்ற
நல்லோன் ஜெகதாஸ் நாட்டுப் பற்றினால்
வீரவேங்கை என்றிடு மொழிக்கு
தாரக மாயினான் தரணியில் வீரனே
மண்ணை மீட்கும் மாபெரும் பணியில்
உண்மை வீரனாய் உரமுடன் போர்க்களம்
புகுந்த மாவீரன் போய் ஆனையிறவினில்
மிகுந்த வீரனாய் எதிரிகள் அஞ்சிடப்
பெரும்போர் புரிந்தனன் பெருவேங்கை யாகவே
நாட்டில் சுதந்திரம் நாட்டவே முயன்ற
''சகீம்'' எனும் வீரன் சற்றுமிளை யாமலே
முன்னேற்ற மோடு எதிர்முக நோக்கிப்
பாய்ந்தே சென்றனன் படைபலத் துடனே
நெடும்போர் புரிந்து நிற்குமவ் வேளையில்
அடுகள மதனில் அமரனே யானான்
அவனியி லவன்பெயர் அழியா தன்றோ!

உரும்பராய் தெற்கு, குடும்பத்தினர்,
உரும்பராய். உற்றார், உறவினர், நண்பர்கள்.
(B/3082)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ். மாவட்டத்துக்குரிய இறுதி நிகழ்ச்சிகள்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகள விழாவில் யாழ் மாவட்ட ரீதியான இறுதி நிகழ்ச்சிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் 22.09.91, 23.09.91 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது வட்டவை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களே மாவட்ட ரீதியான போட்டியில்பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுக் கொள்வார்கள்.

### புலிகளுக்கு

நடாத்த முற்பட்டோரை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயே ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கு கொண்டோர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிகிறது.

இதேபோன்று கடந்தவாரம் வேலூரில் தமிழீழம் தொடர்பாக நடத்தப்படவிருந்த மாநாடு ஒன்றும் பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டதோடு, கலந்து கொள்ளச் சென்றவர்களும் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

### தமிழ் ஆசிரியர்கள்

ஒரு ஆசிரியர் கூட இல்லாத துரதிர்ஷ்ட நிலைக்கு இம் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தொழிற் சங்கங்களோ, அரசியல்வாதிகளோ இந்த நிலைமைகுறித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்றும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

### வியாபாரிகளுக்குப்

றும் வியாழக்கிழமைகளிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருகோணமலை மாவட்ட மக்கள் திங்கள், சனிக்கிழமைகளிலும் பயணம் செய்ய அனுமதிக்கப்படும்.

தவிர்க்க முடியாத காரணங்களால் போக முடியாத நிலையேற்பட்டால், அவர்கள் ஒரு மாவட்டத்துக்கு ஒரு நாள் வீதம் போகவேண்டிய மாவட்டங்களோடு இணைத்துப்போக அனுமதிக்கப்படுவர் என்றும் ஆண்கள் மட்டுமே வியாபார நோக்கங்களுக்குப் போக அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போட்டிக்குரிய

பெறாது; அம்பன் அமெரிக்கன்மிஷன் பாடசாலை மைதானத்தில் 12-09-91, 13-09-91 ஆகிய தினங்களில் நடைபெறும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

### பொலிஸ்

பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்தின்பேரில் கிராம மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்துப் பொலிஸார் இவர்களைக் கைதுசெய்தன.

### பகிரங்க

வதற்கு எம். பிக்களுக்குஉரிமையுண்டு. அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை பலம்பாராளுமன்றத்தில் இருந்தால் அவர்கள் அஞ்சவேண்டியதில்லை. அரசாங்கத்தில் பிழைஇல்லை. மறைப்பதற்கு ஒன்றுமில்லை என்றால் இரகசிய வாக்கெடுப்புக்கு முகம் கொடுக்க அவர்கள் ஏன் பயப்படவேண்டும்? இரகசிய வாக்கெடுப்பு முறையானது, ஆளும் கட்சி எம். பிகள் குற்றச்சாட்டு மனுவுக்கு எதிராக வாக்களிப்பிலிருந்து பின்வாங்காமல் காப்பாற்றும் என்று அவர் தெரிவித்தார்.

பிரேமதாசா மீதான குற்றச்சாட்டு மனு தொடர்பாக சபாநாயகரிடம் எதிர்க்கட்சியினர் இரகசிய வாக்கெடுப்பின் அவசியம் பற்றி வற்புறுத்த உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இராணுவத்தினுள்

பட்ட அதிருப்தியாளர்களும் எதிர்க்கட்சியினரும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுவதாகவும் சுவரொட்டிகள் ஒட்டுவதாகவும் இராணுவத்தினர் மீதும் பொலிஸார் மீதும் குறை கூறியுள்ளனர்.

சென்றாய் எம் செல்வமே!
மண் மீட்புக்காய் ஆனையிறவில்
தொடர்ந்தும் வீரமுடன் போராடி
போர்முனையில் வெற்றியுடன் திரும்புவாய்
என நாம் எண்ணியிருந்தோம். ஆனால்
மாவீரனாய் மண்ணிலே மறைந்து விட்டாயோ?
என்னவென்று உன் முடிவைக் கூற
ஏதும் அறியாது ஏங்குகின்றோம்
எங்கள் குடும்ப குலக் கொழுந்தே ஜோய்
எம்மை வானில் இருந்து வாழ்த்துவாய்
உம்மை மறப்போமா! மறக்குமா நெஞ்சம்
எமது உயிர் மூச்சு உள்ளவரை
மறக்கவே மாட்டோமடா ஜோய்!

உன்பிரிவால் தாங்கொணாத் துயருறும்
பாசமிகு அம்மா, அப்பா,
சகோதரர்கள், உறவினர்கள்

(B/3084)

## தாய் மண்ணின் விடிவில் ஓராண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்: 17 11 1975



வீரமரணம்; 02 09 1990

### வீரவேங்கை சின்னக்காச்சி
### (பஞ்சலிங்கம் தயானந்தன்)
### திதி: 09. 09. 1991

அரும்பான உன் ஆசைகள் மலராகும் இந்நாளில்
களத்தில் குதித்த எம் வீரவேங்கையே - சின்னக்காச்சி
புன்னகை நிறைந்த புன்சிரிப்பாளனே
விழியதில் தேக்கிய ஈழக் கனவுகள்
விரைவாய் உதிக்கையில்
மரணம் உன் உணர்ச்சிகளை மூடி
ஆண்டு ஒன்று நிறைந்தும்
உன் நினைவால் நிலைகுலைந்து நிற்கிறோம்
மரணித்துப் போன உன் உயிர்
சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்!

இவருடன் வீரமரணமடைந்த கப்டன் ரவியையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தயானந்தன் வீதி, பெற்றோர், உறவினர்கள்
நீர்வேலி தெற்கு, நண்பர்கள்.
நீர்வேலி. (B/3070)